2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) இராமசாமி கமிஷன் அறிக்கை.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்திலே வைக்கப்பட்ட பால் கமிஷன் அறிக்கை மீது விவாதம் நடத்தப்பட்டு இருக்கிறது, அதைப் போலவே நேற்றையதினம் இந்த அவைமுன் வைக்கப்பட்ட டபிள்யூ, எஸ். கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் மறைவுக்குப் பிறகு நியமிக்கப்பட்ட திரு இராமசாமி கமிஷனின் அறிக்கைமீதும் விவாதிக்க வேண்டும். ஏனென்றால், முன்பு இருந்த ஆட்சியில் ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதைப் பற்றி விவாதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி எழுதிக் கொடுக்க வேண்டும்.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, எங்களை எழுதிக்கொடுக்கச் சொல்கிறீர்கள், ஆனால் அவர்கள் கேட்டவுடனேயே விவாதத்திற்கு உறுதி மொழி கொடுத்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே நான் யாருக்கும் எந்த உறுதிமொழியும் தரவில்லை. (குறுக்கீடு)

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 106 ஆவது விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் சார்பாக அவை முன்னவர் அவர்கள் வைத்த அறிக்கை மீது விவாதம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால், காவல் துறை பற்றிய மானியக் கோரிக்கை மீது முதலமைச்சர் அவர்கள் பேசியபோது, எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சாட்டிய பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு பல்வேறு புகைப் படங்களைக் காட்டி, காவல் துறை அதிகாரிகள் செய்தது தவறு இல்லை, அந்த நோக்கம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பவரைப் பற்றியே குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறபோது, அதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை, ஆகவே அவர் சார்பாக முன்னவர் அவர்கள் அறிக்கை இன்றைக்கு வெளியிட்டு இருந்தாலும் கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சரியான வகையில் இங்கே நேரடியாக வந்து பதில் அளித்து He must himself get exonerated. He must be above suspicion என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்).

*திரு.. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மீதும், அதேபோல் சட்ட அமைச்சர் அவர்கள் மீதும், ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர் மீதும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு, அரசின் தரப்பில் இருந்து அதற்கு பதில் அளித்து இருக்கிறார். ஆனால் நேற்றையதினம் இங்கே என். எஸ். இராமசாமி அவர்களின் ஒன்-மேன்-கமிஷன் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. அதிலே இந்த அவையில் எதிர்தரப்பில் உள்ளவர்கள் யார் யார் எப்படிப்பட்ட ஊழலைச் செய்து இருக்கிறர்கள் என்று புள்ளிவிவரம் மிகத் தெளிவாகத் தந்து இருக்கிறார்கள். ஆகவே, குற்றம் சாட்டப் பட்டவர்கள் இங்கே அவையில் இருப்பதால், அந்தத் தரப்பில் இருந்து என்ன பதிலைத் தருகிறார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தரப்பட்டுள்ள எந்த ஒரு அறிக்கை மீதும் விவாதம் நடத்தும் உரிமை இந்த அவைக்கு உண்டு. ஆனால் அதை அனுமதிப்பதும், அனுமதிக்காமல் இருப்பதும் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்கும் உரிமை. இங்கே அந்தப் பிரச்னை வந்ததன் காரணமாக விவாதிக் கவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு தாங்கள் அதைப்பற்றி நாளை முடிவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே எந்த அறிக்கைமீதும் விவாதம் வைக்க வேண்டும் என்று கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் முறைப் படி இதிலே எழுதிக்கொடுத்துகேட்பார்களேயனால், அதைப்பற்றி முடிவு செய்யும் உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. இப்போதே அதை முடிவு செய்ய முடியாது. அதைத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-30]

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே வைக்கப்பட்டிருக்கிற எத்தனையோ அறிக்கைகளைப்போல் நேற்றையதினம் (குறுக்கீடு) கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட கூச்சல்கள் எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது, பேராசிரியர் தொடர்ந்து பேசட்டும்.

திரு. . க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல அறிக்கைகள் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக் கின்றன. நேற்றைய தினமும் ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்

கிறது. அந்த அறிக்கையை படித்து பார்க்கிற அளவுக்கு எனக்கு அறிவும் இருக்கிறது. அனுபவமும் இருக்கிறது. இந்த அவையிலே உள்ளவர்கள் மீது அதிலே குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி அவையிலே உள்ளவர்கள் மீது இதிலே குற்றச்சாட்டுகள் சொல்லப்படவில்லை. அவையிலே உள்ளவர்கள் ஆட்சி நடத்தியபோது ஏற்பட்ட குறைகள் என்றும், அதை முழு அளவுக்கு விசாரிக்க முடியவில்லை என்றும் அதற்கு யாரை விசாரிக்க வேண்டுமோ அவர் நாட்டிலே இல்லை என்றும், அவர் வந்ததற்குப் பின்னாலே அதை விசாரிக்க வாய்ப்பு இல்லை என்றும் கருதி, இந்த அளவோடு அந்த கமிஷனில் உள்ளன. அந்த அறிக்கையில் குறைபாடுகள்இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை மட்டுமே கூறப்பட்டிருக்கிறதே ஒழிய, ஆளும் கட்சி கொரடா அவர்கள் குறிப்பிடுவது போல் யார் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருப்பது போன்று இல்லை. விவாதிக்க வேண்டும் என்றார்கள். விவாதிக்க எப்போதுமே எதிர்க்கட்சி தயாராக இருக்கிறது. அந்த விவாதத்தை இந்த அவையிலே நடத்த விரும்பினால் என்றைக்கும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஆனால் இந்த கமிஷனின் அறிக்கையின் அடிப்படையிலே வழக்குப் போட்டு குற்றவாளிகளை தண்டிக்கிற எல்லா உரிமைகளும், நடவடிக்கை எடுக்க வேண்டிய எல்லா உரிமைகளும் அரசாங்கத்திற்கு உண்டு. அந்த முறையில் முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படும் எவர் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. (குறுக்கீடு) இந்த அறிக்கை மட்டும் அல்ல, எந்த அறிக்கையின் மீதும் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட வழியிருந்தால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். அறிக்கையின் மீது விவாதிக்க வேண்டும் என்றாலும், நாங்கள் எப்போதும் விவாதிக்க தயாராக இருக்கிறோம். ஆனால் அறிக்கையிலே உள்ள கருத்துக்களை பத்திரிகையிலே வருகின்ற தலைப்புகளின் அடிப்படையில் படித்துவிட்டு அப்படியே எண்ணிக் கொள்வது அவ்வளவு நல்லது அல்ல, முறையானதும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதங்கள் இத்தோடு முடிவுற்றது. 54—வது விதியின் கீழ் கவன ஈர்ப்பு.